**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் - 2019**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் (சபை) மற்றும் அதன் துணைக் கம்பனிகள் உள்ளிட்ட தொகுதியின் (''தொகுதி'') 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நடடக்கூற்று மற்றும் ஏனை விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள், பொழிப்பு செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளிகள் உள்ளிட்ட தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழ் மற்றும் 1979 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் பெயரில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து, சபையின் மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றினூடாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்ற வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால்

தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்.

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றி அமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களில உள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காதவைகள்**

| | குறித்த நியமக் குறிப்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 32 ஆம் பந்தி பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பதிலீடு செய்ய முடியாத போதும் 2019 திசெம்பர் 31 திகதியன்று காணப்பட்ட நிறுத்தி வைக்கும் வரி, சமூக பாதுகாப்பு வரி, | இந்தக் கணக்கு மீதிகள் பல வருடங்களிலிருந்து சேர்ந்து வரும் மீதியொன்றாவதுடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் பெற | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பதிலீடு செய்வது மேற்கொள்ளக கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | ஆகிய கிடைக்க வேண்டிய வரி மீதி ரூபா 2,770,144, செலுத்த்த வேண்டிய உழைக்கும் போது வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி ஆகிய வரி மீதிகள் ரூபா 504,434 இற்கு பதிலீடு செய்து தேறிய பெருமானமான ரூபா 2,265,710 கிடைக்க வேண்டிய வரி மீதியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், டயகம பண்ணையில் ரூபா 112,458 பெருமதியான மறை மீதியொன்றும் இருப்பு பெறுமதியிலிருந்து கழித்து காண்பிக்கப்பட்டிருந்தது | வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதி இணக்கம் செய்வதுடன் எதிர்கால நிதி ஆண்டுகளில் சரியாக்கப்படும். டயகம பண்ணையில் கணக்கு வைக்கும் போது தவறொன்று ஏற்பட்டுள்ளதென ஏற்றுக்கொள்கிறேன். அதை 2020 ஆண்டின் போது சரியாக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 38 ஆம் பந்தி பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அனைத்து நடைமுறை பெறுமானத்திற்காக நேரொத்த முன்னைய ஆண்டின் பெறுமதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் கணக்கீட்டு குறிப்பு இலக்கம் 11 இன் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களிற்காக நேரொத்த முன்னைய ஆண்டின் பெறுமதிகளை சமர்ப்பித்திருக்கவில்லை. | 2020 ஆண்டு முதல் 11 ஆம் இலக்க குறிப்பிற்காக உயிரியல் விஞ்ஞான சொத்துக்களிற்காக நேரொத்த முன்னைய ஆண்டின் பெறுமதிகளை சமர்ப்பிக்கப்படும். | அனைத்து நடைமுறை பெறுமானங்களிற்காக நேரொத்த முன்னைய ஆண்டின் பெறுமதிகளை சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் 20 ஆம் பந்தி பிரகாரம் மூலதனமாக்கப்பட்ட உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் மாற்றமாகிய ரூபா 160,603,005 பெறுமதியை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு ந்டவடிக்கையின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதும் செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் பெறுமானம் குறைவது கூடுவது பண்ணை செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகுவதனால் அது செயற்பாட்டு நடவடிக்கையாக விளக்கமலித்துள்ளது. அதனால் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் காண்பிக்கப்பட்டுள்ளது. | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் மாற்றத்தை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும் |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 15 மற்றும் 16 ஆம் பந்திகள் பிரகாரம் சபையினால் தற்காலிகமாக அறவிட முடியுமானவரி வேறுபாடுகளை கவனத்திற்கொண்டு மீளாய்வாண்டிற்காக பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் இனங்கண்டு நிதிக்கூற்றுக்களிற்கு செம்மையாக்க வேண்டிய போதும் அவ்வாறு தற்காலிகமாக இடம்பெறும் மாற்றங்கள் கவனத்திற்கொண்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குவதுடன் 2023 ஆண்டிலிருந்து உரிய செம்மையாக்கல் மேற்கொள்ளப்படும். | பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் இனங்கண்டு நிதிக்கூற்றுக்களிற்கு செம்மையாக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 பந்தி பிரகாரம் ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதியில் ஏற்படும் மாற்றத்தின் அடிப்படையின் சொத்துக்கள் மீள் மதிபீடு செய்ய வேண்டியதுடன் நியாயமான பெறுமதி பாரிய அளவில் மாற்றமடையாத சந்தர்ப்பங்களில் குறைந்த பட்சம் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளிற்கு ஒரு முறை மீள் மதிப்பீடு செய்ய வேண்டிய போதும 2019 திசெம்பர் 31 திகதியன்று சபைக்கு சொந்தமான ரூபா 2,651,694,675 ஆன அனைத்து சொத்துக்களையும் மீள் மதிப்பிட்டிருக்கவில்லை. | 2004 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது சொத்துக்கள் மீள் மதிப்பீடொன்றல்லாததுடன் அனைத்து சொத்துக்களில் பெறுமதி பேரேட்டில் உள்ள பெறுமதியின் பெறுமானத்திற்கு செம்மையாக்கல் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சபைக்கு சொந்தமான சொத்துக்கள் கிரயத்திற்கு மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனை நிதிக்கூற்றினுள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்களில் நியாயமான பெறுமதி பாரிய அளவில் மாற்றமடையாத சந்தர்ப்பங்களில் குறைந்த பட்சம் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளிற்கு ஒரு முறை மீள் மதிப்பீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 50 மற்றும் 51 ஆம் பந்திகள் பிரகாரம் ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்களில் பயன்படுத்துகின்ற சொத்துக்களின் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு ஆக்கபூர்வமான ஆயுட்காலமொன்று மதிப்பிடப்பட்டு கணக்குகளில் மதிப்பீட்டு வேறுபாடொன்றாக கணக்கீடு செய்ய வேண்டிய போதும், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 241,881,459 பெறுமதியான கட்டிடங்கள், தோட்ட உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள், மோட்டார் வாகனங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் கட்டமைப்பு என்பவைகள் முழுமையாக தேய்வடைந்து இருந்த போதும் சபையினால் அவைகள் மேலும் பயன்படுத்துவதனால் அதன் பிரகாரம் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை செய்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான 12,000 ஹெக்டயார் அளவான காணிகள் மற்றும் பாரிய அளவிலான பௌதீக சொத்துக்கள் நிலவியதால் சபையில் காணப்படும் நிதி நெருக்கடி காரணத்தால் மீள் மதிப்பீட்டிற்காக செலவு செய்வது கடினமாகையால் அவ்வாறான மீள் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. நிதி அறிக்கைளினுள் நடைமுறையல்லாத சொத்துக்கள் கிரயத்திற்கு கணக்கீடு செய்வது என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே 2004 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது பேரேட்டில் உள்ள பெறுமதியை நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு பெற்றுக்கொள்வது மாத்திரமாகும். | முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் சொத்துக்களில் ஆயுகாலத்தை மீளாய்வு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (எ) | வ/ப இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 50 மற்றும் 51 பந்திகள் பிரகாரம் ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்களில பயன்பாட்டிற்கு எடுக்கும் சொத்துக்களில் ஆயுகாலத்தை வருடாந்தம மீளாய்வு செய்து பயனுள்ள ஆயுடகாலத்தை | கம்பனிக்குரிய முழுமையாக தேய்விடப்பட்ட ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் எதிர்காலத்தில் பெறுமதியை மீள் அதிப்பிட்டு சரியாக கணக்கீடு செய்ய | முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் சொத்துக்களில் ஆயுகாலத்தை மீளாய்வு செய்து கணக்கீடு செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்டு கணக்குகளில் மதிப்பீடுகளில் மாற்றமாக கணக்கீடு செய்ய வேண்டிய போதும், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 42,113,669 பெறுமதியான கட்டிடங்கள், தோட்ட உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள், மோட்டார் வாகனங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திர கருவிகள் மற்றும் கட்டமைப்புகள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டு இருந்த போதும் சபையினால் அவைகளை மேலும் பயன்பாட்டிற்கு எடுப்பததனால் அதன் பிரகாரம் கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கிறேன். | வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு இறுதியில் சபையின் பண்ணைகளில் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களிலிருந்து பெறுமதியை குறிப்பிடப்பட்டுள்ள போபத்தலாவ மற்றும் ஆண்டிகம பண்ணைகளில் ரூபா 1,979,984 ஆன 02 இயந்திரங்களும் பெறுமதியை குறிப்பிடப்படாத மெல்சிறிபுர பண்ணையில் 03 இயந்திரங்களும் ரொசிட்டா பண்ணையில் ஒரு இயந்திரமும், கோழி வளர்ப்பு கம்பனிக்குரிய மாவத்த பண்ணையில் 2016 ஆண்டின் போது ரூபா 3,853,490 செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்த இயந்திரமொன்றும் மீளாய்வாண்டளவில் பயன்பாட்டிற்கு எடுத்திருக்கவில்லை. இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் 12(ஊ) பந்தியின் பிரகாரம் செயலற்று காணப்படும் இயந்திரங்களுக்காக கழிவுநட்ட செம்மையாக்கல் மேற்கொள்ள வேண்டிய போதும் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. | கழிவுநட்ட மதிப்பீடொன்று மேற்கொள்ள தேவையான சொத்துக்கள் சபையிடம் காணப்படவில்லை. இந்த இயந்திர உபகரணங்கள் பயன்படுத்த முடியாதுள்ளதே சந்தையின் மூலப்பொருட்களிற்காக காணப்படும் கடும் பற்றாக்குறை காரணமாகவேயாகும். | விளைவற்று காணப்படும் இயந்திர உபகரணங்களிற்காக கழிவுநட்ட செம்மையாக்கல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஐ) | சபையின் காணப்படும் ரூபா 807,067,195 ஆன தென்னை மரங்கள், ரூபா 30,403,142 ஆன இறப்பர் மரங்கள் மற்றும் ரூபா 1,847,488 ஆன மரமுந்திரி மரங்கள் ஆகியவற்றின் கூட்டப் பெறுமதி ரூபா 839,317,825 யினை உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அந்த சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் கீழ் கணக்கீடு செய்ய வேண்டியதுடன் அந்த சொத்துக்களை | கணக்காய்வு அறிக்கையுடன் இனங்குவதுடன் 2023 நிதி அறிக்கையிலலிருந்து சரி செய்யப்படுகிறது. | இறப்பர் மரங்கள் மற்றும் மரமுந்திரி மரங்கள் முதிர்ந்த மற்றும் முதிர்ச்சியற்றவையாக வெவ்வேறாக நிதிகூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணுதல், அளவீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றை அதற்கு இணங்கி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 45 ஆம் பந்தி பிரகாரம் அந்த சொத்துக்கள் முதிர்ந்த மற்றும் முதிர்ச்சியற்றவையாக வெவ்வேறாக நிதிக்கூற்றுக்களிற்கு இனங்காண வேண்டிய போதும் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை | | |
| (ஒ) | வ/ப இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் நிதி நிலைமை கூற்றில் 2009 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்து முன் கொண்டு செல்லப்படுகிற ரூபா 1,347,099 ஆன மாவத்தை பண்ணையில் முதிர்ச்சியடையாத தேங்காய் பயிர் தற்போது பலனைத் தந்திருந்த போதும் அது இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 45 ஆம் பந்தி பிரகாரம் முதிர்ந்த பயிராக இனங்கண்டு நியாயமான பெறுமானத்திற்கு மதிப்பிடப்பிடப்பட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2009 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்து முன் கொண்டு செல்லப்படுகிற தேங்காய் பயிர் தொடர்பான மீதிற்காக சரியான தரவுகள் இல்லையென உன்மையாகும். 2014 ஜுன் மாதம் முதல் இந்த கம்பனியை ஆரம்பிக்கும் சந்தர்ப்ப அளவிலும் இதற்காக தொடர்புடைய ஆவணங்கள் காணாமல் போயிருந்தது. எனினும் எதிர்கால நிதிக்கூற்றுக்கள் ஊடாக இந்த மீதியை சரி செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | விளைவு தரும் மரங்கள் முதிர்ந்த பயிராக இனங்கண்டு நியாயமான பெறுமானத்திற்கு மதிப்பிடப்பிடப்பட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஓ) | இலங்கை நிதி அறிகையிடல் நியமம் 9 இலக்கத்தின் 5.5.15 பந்தி பிரகாரம் வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் மீதியான ரூபா 177,052,109 இன் பிற்காலத்தில் அளவிட எதிர்பார்த்த கடனை நட்ட முறையை பயன்படுத்த வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்காததன் விளைவாக மீளாய்வாண்டில் வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் கூடுதலாக அல்லது குறைவாக கணக்கிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அறிக்கையுடன் இனங்குவதுடன் 2023 நிதி அறிக்கையிலலிருந்து சரி செய்யப்படும். | வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் கணக்கீடு செய்வதற்காக பிற்காலத்தில் அளவிட எதிர்பார்த்த கடனை நட்ட முறையை பயன்படுத்த வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வ/ப இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் பண்டிருப்புவ பிரிவின் பண்டக கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டு சேவல்கள் மற்றும் கோழிகளினது | பண்டிருப்புவ பிரிவின் 2018/04, 2019/02, 2019/03 மற்றும் மாவத்தை பிரிவில் 2019/01 ஆக சேவல்கள் மற்றும் கோழிகள் 04 | பண்டக கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் சேவல்கள் மற்றும் கோழிகளின் இறுதி இருப்பை கணக்கீடு செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | இறுதி இருப்பு ரூபா 19,329,896 ஆன போதும் இறுதி கணக்குகள் பிரகாரம் அது ரூபா 16,147,294 ஆனமையால் ரூபா 3,182,602 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | தொகுதிகள் இருந்தன. இந்த கால்நடைகளிற்குரிய கிரயம் 2019 பண்டக கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 12,799,184 மற்றும் ரூபா 6,530,712 ஆனது. இக் கிரயதினுள் ஒரு கால்நடைக்காக மேற்கொண்ட அனைத்து செலவுகளும் உள்ளடங்கியுள்ளன. | வேண்டும். |
| (ஆ) | சபையின் கிடைக்க வேண்டிய மீதியாக ரூபா 47,966,507 காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அம் மீதிக்கு உள்ளடங்கலான பண்ணைகளின் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 21,728,705 ஆன போதும் ஒவ்வொரு பண்ணைகளின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அம் மீதி ரூபா 34,521,735 ஆனமையால் ரூபா 12,793,030 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | **மஹபேரிதென்ன பண்ணை ரூபா 271,574**<br>நிதிக்கூற்றுக்களில் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள போதும் பண்ணை கணக்குகளில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளமையும்.<br><br>**ஹொரகெலே பண்ணை ரூபா 305,973**<br>நிதிககூற்றுக்களில் தவறொன்று இடம்பெற்றுள்ளது என ஏற்றுக்கொள்வதுடன் இந்த பெறுமதியை செலவினமாக 2020 ஆண்டின் இலாப நட்ட கணக்கிற்கு பதிவழித்துள்ளது.<br><br>**ரிதியகம பண்ணை ரூபா 13,370,577**<br>பிற்போடப்பட்ட மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்ய வேண்டிய போதும் பண்ணை கணக்குகளில் நடைமுறை சொத்துக்களின் கீழ் இந்த செலவினத்தை காண்பிக்கப்படுவதனால் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளதுடன் இறுதி நிதிக்கூற்றுக்களில் அது சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய மீதி பண்ணைகளினது நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மற்றும் இறுதி கணக்குகளின் பிரகாரம் சமமாக வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களினுள் குறுகிய கால கடன்களின் கீழ் பண்ணைகளின் நடைமுறை கணக்கு மீதியாக ரூபா 29,061,513 ஆன மறை மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது | பண்ணை நடைமுறை கணக்குகளில் கூட்டுத் தொகை அட்டவணையின் குறிப்பிடப்படும் பெறுமதிகளிற்கு சரியானதுடன் அது ரூபா | சோளக் கருத்திட்டத்தின் பெறுமதியையும் கவனத்திக் கொண்டதன் பின் இந்த வித்தியாசம் |

| | | | |
|---|---|---|---|
| | குறுகிய கால கடன் மீதியொன்று அல்ல என்றும் அம் மீதியானது பல வருடங்களாக நிலவி வரும் இணக்கம் செய்யப்படாத மீதியொன்று என அவதானிக்கப்பட்டது. அந்த மீதிகளிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையில் கூட்டுத் தொகை ரூபா 1,248,424,481 ஆகவும் ஒவ்வொரு பண்ணைகளில் நிதிக்கூற்றுக்களில் பிரகாரம் அம் மீதி ரூபா 1,241,148,615 ஆனது. அதன் பிரகாரம் ரூபா 7,275,866 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 1,248,424,481 ஆகும். கணக்காய்வின் போது சோளக் கருத்திட்டத்தின் ரூபா 15,133,321 பெறுமதியை கணக்கிடப்படாதமையினால் இவ் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. நடைமுறை கணக்குகளில் மீதி ரூபா 29,061,513 தொகை பல ஆண்டுகளாக நிலவி வரும் மீதிகளின் கூட்டுத் தொகையாவதுடன் அதை 2020 ஆண்டில் கனிசமான அளவொன்று இணக்கம் செய்து சரி செய்யப்பட்டுள்ளது. | ஏற்பட்டுள்ளதுடன் நடைமுறை கணக்கு மீதியை இணக்கம் செய்து சரி செய்ய வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் தென்னை கீழ் பயிர்செய்கை மற்றும் புதிய தென்னை பயிர்செய்கைக்காக ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 22,566,776 ஆன போதும் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணை பிரகாரம் செலவினம் ரூபா 30,602,883 ஆனமையால் ரூபா 8,036,107 வித்தியாசமானது. | வித்தியாசமொன்று இடம்பெற்றுள்ளது என ஏற்றுக்கொள்கிறேன். அட்டவணை பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட செலவினம் சரியானதாகும். அங்கு 2013 ஆண்டில் பயிர் செய்யப்பட்ட தெங்கு பயிரின் ரூபா 6,714,923 தொகையொன்று 2019 ஆண்டினுள் மெற்கொண்ட செலவினம் ஆரம்ப மீதிக்கு தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளது. பண்ணையின் புல் அபிவிருத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,321,184 ஆன செலவினமொன்று தென்னை கீழ் பயிரிடலிற்கான செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டதால் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. 2019 ஆண்டு இறுதியில் இடம் பெற்றுள்ள அனைத்து பிழைகளையும் சரி செய்யப்பட்டு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டன. | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட செலவினம் அட்டவணையுடன் சமமாக வேண்டும். |
| (உ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் முந்திரி பயிர்கள், இறப்பர் பயிர்கள் மற்றும் ஏனைய பயிர்களுக்கு ஆண்டினுள் மேற்கொண்ட செலவினம் முறையே ரூபா 533,530, ரூபா 954,291 மற்றும் ரூபா 254,475 ஆன போதும் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் செலவினம் முறையே | பதில்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. | முந்திரி மற்றும் இறப்பர் பயிர்செய்கை மற்றும் ஏனைய பயிர்களிற்காக ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட் செலவு அட்டவணையுடன் சமமாக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 208,102, ரூபா 3,178,873 மற்றும் ரூபா 479,919 ஆனதில் ரூபா 2,124,598 வித்தியாசம் ஆனது. | | |
| (ஊ) | வெலிகந்த பண்ணையில் மீளாய்வாண்டினுள் மிளகுப் பயிர்ச்செய்கைக்காக ரூபா 124,662 ஆன செலவொன்றை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் பண்ணைகளிற்குச் சொந்தமான இந்த பயிர்சைகைகளை உயிரியல் விஞ்ஞான சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை. மேலும் இந்த பயிர்சைகைகளை தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டு கொள்கை தொடர்பாகவும் நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்பட்டிருக்கவில்லை | இங்கு ரூபா 124,062 மிளகு பயிர்செய்கை தவிர எஞ்ஙிய மர வகைகளை பண்ணையினால் போதிய செலவொன்ன்றை மேற்கொண்டு முகாமை செய்யப்படுவதில்லை. எனவே அப் பயிர்செய்கை உயிரியல் விஞ்ஞான சொத்துக்களாக இனங்கண்டிருக்கவில்லை.. | உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் இனங்காண வேண்டியதுடன் பின்பற்ற வேண்டிய கணக்கீட்டு கொள்கையை வெளிபடுத்த வேண்டும். |
| (எ) | பல்வேறு வருமானங்களில் உள்ளடக்கப்பட்ட பால் கருத்திட்டத்தின் வருமானம் பண்ணைக் கணக்குகள் பிரகாரம் ரூபா 218,697,945 ஆன போதும் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அம் மீதி ரூபா 219,082,481 ஆனமையால் ரூபா 384,536 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | பால் கருத்திட்டத்தில் ரூபா 384,535 இறுதி இருப்பு வருமானத்துடன் சேர்த்ததன் காரணமாக இவ் வித்தியாசம் எற்பட்டுள்ளது. | பால் கருதிட்டத்தின் வருமானம் சபையின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பண்ணையின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் சமமாக வேண்டும். |
| (ஏ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் சபையின் பிரதான கருத்திட்ட வருமானம் ரூபா 2,241,174,115, ஆன போதும் பண்ணை கணக்குகள் பிரகாரம் அம் மீதி ரூபா 2,277,351,448 ஆனமையால் ரூபா 36,477,333 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பண்ணைக் கணக்குகளில் வருமானம் மற்றும் பண்ணைக் கணக்குகளின் பிரகாரம் வருமானம் நிதிக்கூற்றுகளிற்கு சமமாகும். | நிதிக்கூற்றின் குறிப்பிடப்பட்டுள்ள பண்ணை கணக்குகளில் உள்ள வருமானம் மற்றும் பண்ணை கணக்குகளின் பிரகாரம் வருமானம் சமமாக வேண்டியதுடன் உரிய விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஐ) | ரூபா 1,240,214 வங்கி மேலதிகப் பற்று மீதியொன்றை வேறாக காண்பிக்கப்படாது வங்கி செலவு மீதிகளிற்கு பதிலீடு செய்து காசுக்கு சமமானவையாக ரூபா 5,377,955 நிதிநிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறு இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்வதுடன் 2020 நிதியாண்டில் இருந்து இதை சரி செய்யப்பட்டுள்ளது. | வங்கி மேலதிக பற்று வங்கி செலவு மீதிகளிற்கு பதிலீடு செய்யாது வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | மீளாய்வாண்டு இறுதியில் மொத்த இணக்கம் செய்யப்படாத இருப்பு மீதி ரூபா 25,690,247 நிலவியதென நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கை 3.3.2 இல் காண்பிக்ககப்பட்டிருந்தது. இருப்பு கட்டுப்பாட்டு கணனி தொகுதியின் ஏற்பட்ட தொழில்நுட்ப வழுவின் மீது பால் கருத்திட்டத்திற்குரியதாக இந்த இணக்கம் செய்யப்படாத இருப்பு மீதி ஏற்பட்டிருந்ததடன், அதை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2009 ஆம் ஆண்டில் பால் கருத்திட்டத்திற்கான QB கணக்கீட்டு பொதி அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் தொடர்புடைய கணக்கு காலப்பகுதி இறுதியில் பௌதீக இருப்பு மற்றும் பேரேட்டில் உள்ள இருப்பிற்கிடையே வேறுபாடு காட்டப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு முதல் பௌதிக இருப்பு, இருப்பு பேரேடு (Manual) உதவியுடன் சரிபார்க்கப்பட்டதுடன் அங்கு வேறுபாடுகள் இருந்தால் உரிய பொறுப்புவாயிந்த அலுவலர்களிடமிருந்து அறவிடல் செய்துள்ளது. எனினும் பேரேட்டில் இருப்பு பங்கு மதிப்பு அதிகரித்ததற்கான காரணம் உரியவாறு இனங்காணாததனால் அதை ஐந்தொகையில் இணக்கம் செய்யப்படாத இருப்பொன்றாக பேணிச்செல்லப்பட்டுள்ளது. | இணக்கம் செய்யப்படாத இருப்பு மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் சபையின் முக்கிய கருதிட்டங்களுக்கான விற்பனை செலவு ரூபா 1,821,663,297 ஆன போதும் 31 பண்ணை கணக்குகளில் அந்த இருப்பு பெறுமதி ரூபா 1,806,709,099 ஆனதில் ரூபா 14,954,198 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | சபையின் முக்கிய கருதிட்டங்களுக்கான விற்பனை செலவு ரூபா 1,821,663,297 ஆவதுடன் அங்கு பண்ணை விற்பனை செலவும் அதே பெறுமதி ஆகும். | இறுதி நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் விற்பனை செலவு பண்ணை கணக்குகளுடன் உடன்படாததால் அதனை இணக்கம் செய்து சரியாக சமர்பிக்க வேண்டும். |
| (ஔ) | கடந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம 2018 திசெம்பர் 31 இல் உள்ள உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் - விலங்குகளின் பெறுமதி ரூபா 1,782,405,054 ஆன போதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையில் 2019 சனவரி 01 இல் ஆரம்ப மீதி ரூபா1 ,764,195,583 ஆனதில் ரூபா 18,209,471 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிதி அறிக்கைகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விலங்குகள் மற்றும் அட்டவணைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களில் உள்ள பெறுமதிகள் அட்டவணையில் உள்ள பெறுமதிகளுடன் சமமாக வேண்டும். |
| (க) | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் - விலங்குகளை சேர்த்தல் மற்றும் அகற்றுதல் | உயிரியல் விஞ்ஞான விலங்குகளின் மொத்த தொகையில் எந்த மாற்றமும் | உயிரியல் விஞ்ஞான சொத்துக்களில் விலங்குகளை |

| | | | |
|---|---|---|---|
| | ஆகியவற்றின் பெறுமதிப்பு முறையே ரூபா 432,588,316 மற்றும் ரூபா 463,331,291 ஆக இருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் பெறுமதி முறையே ரூபா 281,730,123 மற்றும் ரூபா 499,103,409 ஆனதில் ரூபா 85,150 மற்றும் ரூபா 35,772,118 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ஏற்பட்டிருக்காததுடன் குறித்த பண்ணைகளின் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் மொத்த பெறுமதிப்பு ரூபா 1,425,794,256 ஆவதுடன் மீளாய்வாண்டில் விலங்குகளின் ஆரம்ப பெறுமதிப்பு கடந்த ஆண்டில் ரூபா 1,610,545,549 பெறுமதி சரியாகப் பெறப்பட்டுள்ளதுடன் கூட்டல் மற்றும் குறைப்புகளில் விலங்குகளின் அட்டவணையை வழங்குவதில் குறைபாடு ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். | சேர்த்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றின் பெறுமதி அட்டவணைக்கு சமமாக வேண்டும். |
| (கா) | நிகவெரட்டிய பண்ணையில் பண்டகக் கணிப்பீடு மேற்கொண்ட திகதியிலிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு விலங்குகளில் செய்யப்பட்ட மாற்றங்களை சரிசெய்யும் போது 4 பசுமாடுகள் மற்றும் இரண்டு எருதுகள் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளதால் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் ரூபா 387,638 இனால் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது. | 2019 மீளாய்வாண்டில் பசுமாடுகள் பௌதீக பரீட்சிப்பின் போது பௌதீக ரீதியாக இருந்த கால்நடைகளின் எண்ணிக்கை 293 ஆவதுடன் 2019/12/31 திகதி மற்றும் பௌதீக பரீட்சிப்புக்கு இடைப்பட்ட காலத்தினுள் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. | பண்டகக் கணிப்பீடு மேற்கொண்ட திகதியிலிருந்து திசெம்பர் 31 திகதி வரை கால்நடைகளில் செய்யப்பட்ட மாற்றங்களை செம்மையாக்கலை சரி செய்ய வேண்டும். |
| (கி) | சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையில் சபைக்கு சொந்தமான 30 பண்ணைகளுக்கான ஒவ்வொரு விலங்கின் மொத்த மதிப்பைக் காட்டியுள்ள போதும் வெலிகந்த பண்ணையில் உள்ள கால்நடைகளின் மொத்த பெறுமதி ரூபா 14,523,886 இற்கு பதிலாக தேறிய பெறுமதியான ரூபா 13,071,497 காட்டப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களிற்காக இந்த தேறிய பெறுமதி சேர்க்கப்பட்டு மீண்டும் 10 சதவீதத்தால் மாற்றப்பட்ட பெறுமதி குறைக்கப்படுவதால் வெலிகந்த பண்ணையில் உள்ள மாடுகளின் பெறுமதி குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தன. | வெலிகந்த பண்ணையில் உள்ள கால்நடைகளின் மொத்த பெறுமதி ரூபா 14,523,886 ஆவதுடன் ஈட்டப்படாத இலாப ஒதுக்கீடு ரூபா 1,452,389 ஆகவும. அதன் பிரகாரம் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள தேறிய பெறுமதி ரூபா 13,071,497 ஆகும். இது சரியாவதுடன் கணக்குகளில் அந்த பெறுமதி சரியாகக் காட்டியுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் ஏற்பட்டுள்ள இரட்டை கழித்தல் பிழையை சரி செய்ய வேண்டும். |
| (கீ) | ஹாரகம பண்ணையின் உயிரியல் சொத்துக்கள் (விலங்குகள்) பண்டகக் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் மற்றும் கணக்கின் பிரகாம் ரூபா 6,211,740 ஆக | ஹாரகம பண்ணையின் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் பண்டக கணிப்பீட்டு அறிக்கை மற்றும் கணக்கு அறிக்கையின் | உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் பெறுமதி இறுதிக் கணக்கு மற்றும் அட்டவணையுடன் |

| | | | |
|---|---|---|---|
| | இருந்த போதும் வழங்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் ரூபா 7,399,121 ஆக இருந்ததில் 1,569 விலங்குகளின் மற்றும் ரூபா 1,187,381 பெறுமதியான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | பிரகாரம் ரூபா 6,211,740 ஆன பெறுமதி சரியானதுடன் அட்டவணையில் தவறுதலாக வேறு பெறுமதியொன்று குறிப்பிடப்பட்டுள்ளது. | சமமாக இருக்க வேண்டும். |
| (கு) | மஹபேரியதென்ன பண்ணையின் பண்டகக் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் 2019 திசம்பர் 31 திகதி பன்றிகளின் பெறுமதி ரூபா 7,493,500 ஆன போதும் பண்ணைக் கணக்குகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது ரூபா 5,134,970 ஆகையால் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,358,530 இனால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. | கணக்குகளின் சரியான பெறுமதி குறிப்பிடப்படுவதுடன் அதன் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துகள் நிதி அறிக்கைகளில் குறைத்து மதிப்பிடப்படவில்லை. அதற்கு காரணம் பன்றி கருத்திட்டத்தில் 130 பெண் விலங்குகளின் உண்மை பெறுமதி ரூபா 1,089,850 ஆவதுடன் அச்சுப் பிழையால் ரூபா 3,448,380 ஆக அறிக்கையிடப்படல் இந்த வேறுபாட்டிற்கு காரணமாகும். | பண்டக கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கால்நடைகளின் பெறுமதி பண்ணை கணக்குகள் மற்றும் அட்டவணையில் காட்டப்பட வேண்டும். |
| (கூ) | ரிதியகம மற்றும் மஹபேரியதென்ன பண்ணைகளில் 1328 விலங்குகளின் கணக்கெடுப்பின் போது அந்த விலங்குகளின் தினசரி சராசரி பால் உற்பத்தி முறையே 11.82 லீற்றர் மற்றும் 2.4 லீற்றராகக் கருதப்பட்டு ரூபா 13,385,730 பெறுமதி சேகரிக்கப்படு இருந்தது. ஒவ்வொரு பசு மாட்டின் உண்மையான பால் உற்பத்திக்குப் பதிலாக அவ்வாறு சராசரி மதிப்பைப் பயன்படுத்துவது குறைபாடுடையதால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள விலங்குகளின் பெறுமதி அதிகமாகவோ குறைவாகவோ கணக்கிடப்பட்டடுள்ளது. | தவரொன்று ஏற்பட்டுள்ளதனை ஏற்றுக் கொள்வதுடன் இத்தவறை அடுத்த நிதியாண்டிலிருந்து சரிசெய்யப்பட்டுள்ளது. | ஒவ்வொரு பசு மாட்டின் உண்மையான பால் உற்பத்தியின் அடிப்படையில் பெறுமதி கூட்டல் செய்யப்பட வேண்டும். |
| (கெ) | கொவுல்வெவ மற்றும் ஆன்டிகம பண்ணைகளில் உள்ள 323 விலங்குகளின் கணக்கெடுப்பின் போது அந்த விலங்குகளின் தினசரி சராசரி பால் உற்பத்தி ரூபா 1,627,180 ஆன பெறுமதி சேர்க்கப்பட்டுடிருந்தது. சபையினால் கால்நடைகளை இறக்குமதி செய்யும் போது சபையின் ஏற்றுக் கொண்ட கொள்கையான ஒவ்வொரு பசு மாட்டின் உண்மையான பால் | தவரொன்று ஏற்பட்டுள்ளதனை ஏற்றுக் கொள்கிறேன் அதனை 2020 நிதியாண்டிலிருந்து சரிசெய்கிறேன். | ஒவ்வொரு பசு மாட்டின் உண்மையான பால் உற்பத்தியின் அடிப்படையில் பெறுமதி கூட்டல் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்திக்கு பதிலாக அவ்வாறு சராசரி பெறுமானத்தை பயன்படுத்துவது தவறுடன் கூடியதால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள விலங்குகளின் பெறுமதி அதிகமாகவோ அல்லது குறைவாகவோ கணக்கிடப்பட்டது. | | |
| (கே) | பேரேட்டின் பிரகாரம் ஆண்டினுள் பணிக்கொடையாக ரூபா 12,198,802 தொகை செலுத்தப்பட்ட போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஊழியர் நலன் கொடுப்பனவாக ரூபா 27,190,479 காட்டப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அம் மீதிகளிற்கிடையில் ரூபா 14,991,677 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய பேரேட்டின் பிரகாரம் ஆண்டில் செலுத்த வேண்டிய பணிக்கொடை தொகை ரூபா 27,190,479 ஆவதுடன் இதில் ரூபா 12,947,241 தொகை 2019 ஆண்டிலேயே செலுத்தப்பட்டுள்ளதுடன் 2019 ஆண்டில் செலுத்த வேண்டிய போதும் 2020 ஆண்டில் செலுத்தப்பட்ட பணிக்கொடை ரூபா 14,243,237.02 ஆகும். அதன் பிரகாரம் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | காசுப்பாய்சல் கூற்றில் ஆண்டின் ஊழியர் நலன்கள் செலுத்துதல் மாத்திரம் காட்டப்பட வேண்டும். |
| (கை) | நிதிக்கூற்றக்களில் உள்ளடங்கிய பண்ணை கணக்குகளின் பிரகாரம் மஹபேரியதென்ன பண்ணையின் சராசரி இருப்பு பெறுமதி ரூபா 1,219,199 ஆன போதும் பண்டக கணிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் அவ்விருப்பு பெறுமதி ரூபா 2,264,218 ஆனதில் ரூபா 1,045,019 ஆன வித்தியாசமானது. மேலும் பண்டக கணிப்பீட்டு அறிக்கையில் சில பொதுவான இருப்புப் பொருட்களின் பெறுமதியும் குறிப்பிடப்படவில்லை. | மஹபேரியதென்ன பண்ணையின் சராசரி கையிருப்பு பெறுமதி சரியாவதுடன் பண்டக கணிப்பீட்டு அறிக்கையில் தட்டெழுத்து பிழை காரணமாக அப் பெறுமதி மாறியுள்ளது. பண்டக கணிப்பீட்டு அறிக்கையில் பயன்படுத்தப்பட்ட உருப்படிகள் ஏற்கனவே வருமானக் கூற்றில் பதிவழிக்கப்பட்டுள்ளதால, இவ்விருப்பு மதிப்பீடு செய்யப்படவில்லை. | பண்டக கணிப்பீட்டு அறிக்கையை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (கொ) | மீளாய்வாண்டின் இறுதி காலாண்டின் விற்பனையின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட அட்டுறு பொருளாதார சேவை வரி பெறுமதியான ரூபா 3,042,196 நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டியதாக செம்மையாக்கி இருக்கவில்லை. | மீளாய்வாண்டில் உரிய வரி செம்மையாக்கல் செய்யப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். | மீளாய்வாண்டின் இறுதி காலாண்டின் அட்டுறு பொருளாதார சேவை வரி செம்மையாக்கல் செய்யப்பட வேண்டும். |
| (கோ) | 2019 திசெம்பர் 31 திகதி காசோலை இலக்கம் 036965 மூலம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 200,000 செலுத்தப்பட்ட போதும் அக் கொடுப்பனவு மீளாய்வாண்டிற்குரியதாக | தவறொன்று ஏற்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கிறேன். | ஆண்டிற்குரியதாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தலை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அடுத்த ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (கௌ) | அனைத்து வெளியீட்டின் மீது பெறுமதி சேர்க்கப்பட் வரி மற்றும் உள்ளீடு மீத பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கட்டுப்பாட்டு கணக்கு மூலம் சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதும் சபையினால் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கட்டுப்பாட்டு கணக்கிற்கு மேலதிகமாக கிடைக்க வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கணக்கொன்று பேணிச் செல்லப்பட்டிருந்தது. அதன் ஆரம்ப மீதி ரூபா 12,702,061 ஆக இருந்த போதிலும் அந்த மீதிக்காக அட்டவணையோ அல்லது எவ்வித விளக்கமோ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த மீதி 2013 ஆம் ஆண்டிலிருந்து நிலவிவரும் ஆரம்ப மீதிகளாவதுடன் அதற்குரிய விரிவான ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாது. | கிடைக்க வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கணக்கின் ஆரம்ப மீதிகளிற்காக அட்டவணைகள் மற்றும் விளக்கங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (ச) | நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 4 இல் ஏனைய வருமானத்தின் கீழ் காணி இழப்பீடு கிடைப்பனவு மற்றும் சொத்துக்களை விற்பனையில் உள்ளடங்கிய ரூபா 167,100,000 ஆன ருக்அத்தன காணியை முதலீட்டு சபைக்கு விற்பதனுடன் தொடர்புடைய அங்கீகாரம் மற்றும் பெறுமதி மதிப்பிட்ட முறையை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இது தொடர்பான எழுத்துமூல சான்றுகளை இதனுடன் சமர்ப்பிக்கிறேன். | சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூல சான்றுகளில் உரிய அங்கீகாரம் மற்றும் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்ட முறை முன்வைக்கப்படவில்லை என்பதுடன் கணக்காய்விற்கு தேவையான சான்றுகளை விரைவில் சமர்ப்பிக்க வேண்டும். |
| (சா) | 2019 ஆம் ஆண்டில் சபையின் நிதிக்கூற்றுக்களில் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் (கால்நடைகள்) பெறுமதிகள் காட்டப்படும் போது அந்த கால்நடைகளின் ஆண்டு இறுதி பெறுமதியினால் மாற்றப்படாத நிகழ்தகவை 10 சதவீதம் அல்லது, ரூபா 150,160,617 கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த கால்நடைகளை ஆண்டு இறுதியில் நியாயமான பெறுமானத்திற்கு மதிப்பிடும் போது அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்ட பின்னர் நியாயமான பெறுமானத்திற்கு | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 41 இன் படி கால்நடைகளை நியாயமான பெறுமதிக்கு ஐந்தொகை திகதிக்கு மதிப்பிட்ட பின்னர் அந்த மொத்த கால்நடைகளையம் கணக்கீட்டு காலப் பகுதியின் பின்னர் மாற்றப்படாத இயலுமை காணப்படுகின்றது. அது மொத்த பெறுமதியில் 10 % என கணக்கீட்டு கொள்கையினுள் வெளிப்படுத்தியுள்ளது. அதற்காக அடிப்படையாகக் கொண்ட காரணிகள் ஆவது, | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள நிதிக்கூற்றுக்களில் நியாயமான பெறுமானத்திற்கு காட்டும் போது மாற்றப்படாத நிகழ்தகவைக் கருத்தில் கொண்டு நியாயமான பெறுமானத்தைத் தீர்மானித்த பின்னர் மீண்டும் 10 சதவீதம் குறைக்க கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பிடுவதனால் மீண்டும் 10 சதவீதம் குறைக்கப்படுவதனால் கால்நடைகளின் பெறுமதி அப் பெறுமதியால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | a. சுமார் 5% விலங்குகள் இறக்கின்றன.<br><br>b. ஐந்தொகை திகதி மற்றும் மாற்றப்படும் திகதிக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் கால்நடைகளில் ஏற்படும் உயிரியல் ரீதியான மாற்றங்கள்<br><br>மேற்குறித்த விடயங்களை கருத்தில் கொண்டு 10% மதிப்பிடப்பட்ட மாற்றப்படாத இலாப ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (சி) | நிதிக்கூற்றுக்களில் 9 ஆம் குறிப்பு இலக்கத்தின் கீழ் ரூபா 46,804 ஆன மஹபேரிதென்ன பண்ணையின் அபிவிருத்தி கிரயமும் ரூபா 7,295,921 ஆன ருக்அத்தன பண்ணையில் அபிவிருத்தி கிரயமும் ரூபா 87,178 ஆன பெலிகம பண்ணையில் அபிவிருத்தி கிரயமும் ஆக கூட்டுத் தொகை ரூபா 7,429,903 ஆன அபிவிருத்தி கிரயம் உரிய காணியின் கிரயத்திலிருந்து, அகற்றியிருந்ததுடன் அந் அகற்றப்பட்ட காணிகளில் பெறுமதி காணியினுள் உள்ளடங்கப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சபையிடம் இருக்கவில்லை. மேலும், அக் காணிகள் ஒப்படைத்தது யாருக்கு, அதற்கான அங்கீகாரம், அந் ஒப்படைக்கப்பட்ட காணிகளின் பெறுமதியை கணக்கிடப்பட்ட முறை தொடர்பான எவ்வித விபரமும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | மஹபேரிதென்ன பண்ணையின் 4 ஏக்கர் 4 பர்சஸிற்குரிய கிரயம் ரூபா 46,804 உம் ருக்அத்தன பண்ணையின் 446 ஏக்கர் 36.13 பர்சஸிற்குரிய கிரயம் ரூபா 7,295,921 ஆன தொகையொன்றும் பெலிகம பண்ணையின் 2.344 ஏக்கரிற்கு ரூபா 87,178 ஆன பெறுமதியும் அகற்றியுள்ளது கணக்குகளில், ஒவ்வொரு பண்ணைகளில் கணக்குகளில் எடுத்துக்காட்டும் மொத்த பெறுமதியிலிருந்து அகற்றப்படும் அளவிற்கு விகிதாசாரமாக அகற்றப்பட்டுள்ளது. | காணிகள் தொடர்பான அனைத்து விபரங்களும் சபையினால் பேணிச்செல்ல வேண்டியதுடன் காணிகள் ஒப்படைத்தது யாருக்கு, அதற்கான அங்கீகாரம், அந் ஒப்படைக்கப்பட்ட காணிகளின் பெறுமதிகள் கணக்கிடப்பட்ட முறை போன்ற விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் பல வருடங்களாக நிலவிவரும் சார்நத கம்பனியொன்றான மஹாவலி கால்நடை வியாபார | பரீட்சை மீதியில் ரூபா 4,784,415 ஆன மீதியொன்று இருப்பதாக | நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய மீதிகளை உறுதி செய்து கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனியின் கிடைக்க வேண்டிய மீதியாக ரூபா 4,184,415 காட்டியிருந்தது எனினும் இந்த கிடைக்க வேண்டிய மீதியை கணக்குகளில் பெற வேண்டிதாக காட்டயிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | வேண்டும். |
| (ஆ) | இலங்கை கோழி வளர்ப்பு கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதியாக ரூபா 2,044,818 காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அம் மீதியானது ஒரு வருடத்திற்கும் அதிக காலத்திலிருந்து நிலவி வரும் மீதியொன்றாவதுடன் கோழி வளர்ப்பு கம்பனியின் 100 சதவீதம் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையிற்கு சொந்தமானதால் நிதிக்கூற்றுக்களில் தொகுதியின் இந்த பெறுமதியை காட்டுவதுன் ஊடாக நதிக்கூற்றுக்களில் ஏனைய நடைமுறை சொத்துக்கள் மீதி மிகையாக கணக்கிடப்படடிருந்தது. | கோழி வளர்ப்பு அபிவிருத்தி கம்பனியிடமிருந்து ரூபா 2,044,818 ஆன தொகையொன்று கிடைக்க உள்ளதுடன் கோழி வளர்ப்பு அபிவிருத்தி கம்பனியினால் பெற்றுக்கொண்ட ரூபா 140 மில்லியனான முற்பணமொன்று இருப்பதால் இந்தத் தொகையை அந்த முற்பணத்தின் மூலம் தீர்க்கும் இயழுமை உள்ளது. | நிதிக்கூற்றுக்களில் தொகுதியின் தகவல்களை சரியாக வெளிப்படுத்த வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 31 திகதியன்று நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் பெறுமதி ரூபா 177,052,109 ஆவதுடன் இந்தக் கடன்படுனர்களின் முறையே, ரூபா 4,849,129, ரூபா 20,628,411 மற்றும் ரூபா 57,096,551 இனை 3 - 4 ஆண்டுகளும், 4 - 5 ஆண்டுகளும் மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அறவிடப்படாத கடன்படுனர் பெறுமதி எனவும் அவற்றை அறவிடுவது நிச்சயமற்றது எனவும் அம் மீதிக்காக ஐயக்கடன் ஏற்பாடு செய்திருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | அறவிடப்படாத கடன்படுனர் பெறுமதிகளை விரைவில் அறவிடவும் நிச்சயமற்ற மீதிகளிற்காக ஐயகடன் ஏற்பாடும் சேய்ய வேண்டும். |
| (ஈ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து அறவிட வேண்டியதாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 500,000 ஆன நிலுவை வரி தொகை மற்றும் ரூபா 267,706 ஆன கிடைக்க வேண்டிய ஏனைய வரிகளுக்கான விரிவான அட்டவணைகள் கணக்காய்விற்கு | 2012 ஆம் ஆண்டுக்கு முன்னரிலிருந்து நிலவி வரும் ஆரம்ப மீதியாவதுடன் இது தொடர்பான விவரங்களைக் கண்டறிய கடினமாக உள்ளது. | அறவிட வேண்டிய வரிகளுக்கான விரிவான அட்டவணைகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவற்றை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த மீதிகள் 2012 ஆம் ஆண்டுக்கு முன்னரிருந்து நிலவி வரும் மீதியாவதுடன் அவற்றை அறவிடுவது நிச்சயமற்றதாக அவதானிக்கப்பட்டது.

### .6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் வ/ப இலங்கை கோழிக் வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் அனைத்து பங்குகளை கையேற்றிக்கொள்வது 2014 மே 07 ஆம் திகதி மேற் கோள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக அக் கம்பனியினால் சபைக்கு வழங்கியிருந்த ரூபா 140,000,000 ஆன கடன் தொகையை மற்றும் லிபியான் கெளிநாட்டு முதலீட்டு கம்பனியிற்கு (LFICO) செலுத்த வேண்டிய ரூபா 4,201,333 ஆன மீதியையும் தீர்க்க சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.. | வ/ப இலங்கை கோழிக் வளர்ப்பு கம்பனியிற்கு செலுத்த ரூபா 140,000,000 உள்ளதென கணக்குகளில் ஏடுத்துக்காட்டுவதுடன் கம்பனி பங்கிலாபம் செலுத்தும் சந்தர்ப்பத்தில் அப் பங்கிலாபத்தை மேவுகை செய்ய இந்த தொகை முற்பணமாக பெற்றுக்கொண்டுள்ளது. லிபியான் முதலீட்டு கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 4,201,333 ஆன தொகை வெளிநாட்டு கம்பனியினால் கோரி இல்லாததுடன், அக் கம்பனி தொடர்பான எவ்வித விபரமும் சபையிடம் இல்லாததனால் இதை தீர்க்க இயமுமை இல்லை. | செலுத்த வேண்டிய மீதி தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 5.1.2 ஆம் பிரிவு | நிறுவனத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற உற்பத்தி மற்றும் செயற்பாட்டு வசதிகள், மனிதவளம் மற்றும் முகாமைத்துவ திறன்கள், தொழிநுட்ப அறிவு, சந்தைகள் மற்றும் வளங்குனர்கள், நிறுவனக் கட்டமைப்பு, திட்ட கால எல்லையினுள் நிறைவேற்ற வேண்டிய இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பாக செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கிய முகாமைத்துவ பொறுப்புக்கள், சபையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் 2016-2020 கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2021-2025 கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கும் போது பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய விடயங்களை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டத்தில் உரிய தகவல்களை உள்ளடக்க வேண்டும். |
| (ii) | 5.1.3 பிரிவு | கூட்டிணைந்த திட்டத்தை பணிப்பாளர் சபை அங்கீகரித்த பின்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் தொடர்பான திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்க வேண்டிய போதும் 2016-2020 கூட்டிணைந்த திட்டத்தை 2016 ஒக்டோபர் 27 திகதி அங்கீகரித்து 2017 ஜுலை 12 ஆம் திகதி தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. | 2016-2020 கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கும் போது சில தாமதங்கள் இடம்பெற்றுள்ளது. | கூட்டிணைந்த திட்டத்தை சரியான காலத்தினுள் உரிய தரப்பினர்களிடம் சமர்பிக்க வேண்டும். |
| (iii) | 6.5.1 பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களில் நிதிக்கூற்று மற்றும் வருடாந்த நகழ் அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் 2019 ஆண்டின் நிதிக்கூற்று மற்றும் வருடாந்த நகழ் அறிக்கை 2023 மார்ச் 03 திகதி முன்வைக்கப்பட்டிருந்தது. | தற்போது 2020, 2021, 2022 நிதியாண்டுகளின் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ள துடன் கணக்காய்வினால் நிதி அறிக்கை பெறப்படுவது ஒரு நிதியாண்டின் கணக்காய்வ முடிவடைந்தவுடன் ஆகையால் தாமதமொன்று உள்ளதுடன் எனினும் 2023 ஆண்டு இறுதியில் இத் தாமதம் முடிவடையுமென | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களில் நிதிக்கூற்று மற்றும் வருடாந்த நகழ் அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எதிர்பார்க்கிறேன். | |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 திகதிய இலக்கம் 2014/01 பொது நிதிச் சுற்றறிக்கையின் 5.2 பந்தி | எதிர்பார்த்த வணிக செயற்பாடுகள் உள்ளடங்கிய செயல் நடவடிககை திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய வெலிசர பண்ணை, டிலையிட் கருத்திட்டம், பட்டய விற்பனை நிலையம் ஆகிய பிரிவுகளின் செயற்பாடுகள் மற்றும் வருடாந்த பாதீட்டில் உள்ளடங்க வேண்டிய காசுப் பாய்ச்சல் கூற்று, கடன் மீள்செலுத்தும் திட்டம், நாளாதுவரையாக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பு, அங்கீகார ஆளணி மற்றும் உள்ளவாரான ஆளணி தொடர்பான விபரங்கள் உள்ளடங்கி இருக்கவில்லை. | தற்போது செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது வெலிசர பண்ணையின் கீழ் UHT பால் உற்பத்தி, பட்டய விற்பனை நிலையம் ஆகிய செயற்பாடுகள், பாதீட்டில் உள்ளடங்க வேண்டிய காசுப் பாய்ச்சல் கூற்று, நாளாதுவரையாக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பு, அங்கீகார ஆளணி மற்றும் உள்ளவாரான ஆளணி தொடர்பான விபரங்களை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய பகுதிகளை உள்ளடக்கி சரியாக தயாரிக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டில் வரிக்கு முன்னரான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 452,737,459 நட்டமொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 1,624,315,327 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,171,577,868 ஆன நட்டத்தின் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்நட்டக் குறைவிற்கு நிதிசார் கிரயம் குறைந்தமை மற்றும் ஏனைய வருமானங்கள் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தன.

**2.2 விகிதப் பகுப்பாய்வு**

மீளாய்வாண்டில் நடைமுறை சொத்து விகிதம், விரைவு சொத்து விகிதம், மொத்த இலாப விகிதம் முறையே 0.17 ஆக 0.10 ஆக மற்றும் 17.6 ஆனதுடன் முன்னைய ஆண்டில் அவ் விகிதங்கள் முறையே 0.17 ஆக 0.11 ஆக மற்றும் 19 ஆக இருந்தன. அதன் பிரகாரம் இவ் விகிதங்களில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் நடைமுறை சொத்து விகிதம், விரைவு சொத்து விகிதம் பலவீனமான நிலையில் உள்ளதால் தொழிற்பாட்டு மூலதன பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. மேலும் மொத்த இலாப விகிதம் குறைவதற்கு விற்பனை வருமானம் குறைந்தமை காரணமாக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் சபையினால் மஹபேரியதென்ன பண்ணையின் விக்டோரியா பகுதியை இராணுவத்தின் சிங்ஹ ரெஜிமெத் படைப்பிரிவுக்கு ஒப்படைதற்காக ரூபா 10,303,750 தொகை பெறப்பட்டு அதனை வருமானமாகக் கணக்கீடு செய்திருந்த போதும் இந்த ஒப்படைத்தலை எந்த ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்து என தெளிவுபடுத்தப்பட்டு இருக்கவில்லை. | மஹபேரியதென்ன பண்ணையின் ஒரு பகுதி இராணுவப் கடைக்கு ஒப்படைக்கப்பட்டதன் மூலம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 6,500,000 உம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 3,803,750 உம் கிடைத்ததுடன் ஒப்படைக்கப்பட்ட காணிகளில் பெறுமதியாக புத்தகங்களில் குறிப்பிடப்படுவது ரூபா 46,804 ஆகும். அதன் பிரகாரம் சொத்துக்களை அகற்றும் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருப்பது காணியின் அபிவிருத்தி கிரயமாவதுடன் அதன் பெறுமதி ரூபா 46,804 ஆகும். இந்த இரண்டு பெறுமதிக்கிடையிலான வித்தியாசம் இலாபமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | காணிகளை ஒப்படைத்தது எந்த ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெலிசர பண்ணைக்கு சொந்தமான டிலைட் கருத்திட்டத்தின் மக்கள் வங்கிக் கணக்கில் ரூபா 62,820 ஆன மீதியொன்று நிலவிய போதும் அக் கணக்கிற்காக வங்கி இணக்கக் கூற்றொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தவறொன்று இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்வதுடன் 2020 நிதியாண்டிலிருந்து இது சரி செய்யப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான அனைத்து பண்ணைகளின் வங்கிக் கணக்குகளிற்கு வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 09 இன் கீழ் நடைமுறை வேலைகள் ரூபா 17,734,893 இனை மூலதனமாக்கியுள்ளதாக காண்பிக்கப்பட்டிருந்த போதும் கட்டமைப்புகளின் கீழ் ரூபா 4,390,935 தொகையும் கட்டிடங்களின் கீழ் ரூபா 1,000,350 தொகையும் இயந்திரங்கள் மற்றும் பொறிகளின் கீழ் ரூபா 40,708 தொகையும் மற்றும் பிரதான அலுவலகத்தின் கீழ் ரூபா 12,302,900 தொகையுமாக குறித்த சொத்துக்களின் பெறுமதிகள் நிலையான | • மஹாபெரியதென்ன பண்ணையில் ரூபா 4,029,101 ஆன குளிர் அறைகள் 2020 செப்டம்பர் மாதத்திலும் ஹாரகம பண்ணையில் ரூபா 361,834.13 செம்பிரி ஆடுகள் 2019 திசெம்பர் மாதத்திலும் நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br>• மஹபேரியதென்ன பண்ணையில் ரூபா 11,310.00 குளிர் அறை திருத்த செலவினம், செலவொன்றாக 2020 ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் | மூலதனமாக்கப்படும் அனைத்து சொத்துக்களும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துகள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொலன்னறுவை பண்ணையில் ரூபா 989,040.77 ஆன புதிய விற்பனை நிலையத்தை 2020 திசெம்பர் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br>• மஹபேரியதென்ன பண்ணை இயந்திர உபகரணங்கள் ரூபா 40,707 இனை செலவினமாக 2021 இல் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>• மஹபேரியதென்னை பண்ணையில் ரூபா 7,911,380.11 ஆன மாட்டு தொழுவத்தை 2020 ஆண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கும் மார்டின் பண்ணையில் ரூபா 2,195,760,99 வீதம் இரண்டு சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த குளிர் அறைகளை ஸ்தாபிப்பதற்கான 20 சதவீத முற்பணம் 2019 ஆண்டில் நிலையான சொத்து பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. | |
| (ஈ) | தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை, வ/ப மகவெலி கால்நடை வியாபார கம்பனி மற்றும் வ/ப இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனி ஆகிய மூன்று கம்பனிகளிற்கு 12,617.43 ஹெக்டயார் அளவான நிலம் சொந்தமானதுடன் மீளாய்வாண்டு இறுதி அளவில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் 2,266.05 ஹெக்டயாரும், மகவெலி கால்நடை வியாபார கம்பனியின் 9.7 ஹெக்டயாரும், இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனயின் 35.6 ஹெக்டயாருமாக கூட்டுத் தொகை 2,311.35 ஹெக்டயார் பயன்படுத்தப்படாத காணிகள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டன. | 2022 ஆண்டில் பரசங்கஸ்வெவ பண்ணையில் 980 ஏக்கர்களும் ஓயாமடுவ பண்ணையில் 826 ஏக்கர்களும் வீரவில பண்ணையில் 150 ஏக்கர்களும் கொட்டுகச்சிய பண்ணையில் 150 ஏக்கர்களும் நிகவெரட்டிய பண்ணையில் 250 ஏக்கர்களும் மரண்தவில பண்ணையில் 100 ஏக்கர்களும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. 2021 ஆண்டு முதல் சபையினால இனங்காணப்பட்ட குறைபயன்பாட்டு காணிகளை கால்நடை உணவு உற்பத்திக்காக குறுகிய கால குத்தகை ஒப்பந்தங்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படாத காணிகளை ஏனைய வருமானமொன்றை ஈட்டுவதற்கு பயன்படுத்த வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மஹபேரியதென்னையில் அமைந்துள்ள 517 பர்சஸ் காணியொன்றை தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 24,418,300 தொகைக்கு 99 வருடங்களிற்கும், வெலிசறையில் அமைந்துள்ள் 31 பர்சஸ் ஆன இன்னும் ஒரு காணி தனியார் ஆடை கம்பனியுடன் ரூபா 31,600,800 தொகையிற்கு 30 வருடங்களிற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ருந்தது. 1972 இன் 11 ஆம் இலக்க அரச கமநல சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 1975 பெப்ரவரி 14 ஆம் திகதிய 157 இலக்க வர்த்தமானி ஊடாக மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம், சபையினால் மேற்கொள்ள வேண்டிய கடமைகளை காண்பிக்கப்பட்டிருந்ததுடன், இந்த காணிகளை குத்தகைக்கு வழங்குவது அக் கடமைகளுடன் தொடர்பற்றது என அவதானிக்கப்பட்டது. | சபையினால் குத்தகைச் சொத்தை ரஜவெல்ல ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது 1996.12.04. அன்று ஆவதுடன் அதன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாவின் கணக்கிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது 1997 சனவரி மாதம் முதல் ஆவதடன் அதன் பிரகாரம் இவ் வித்தியாசத்திற்கு காரணமாகுவது 1996 திசெம்பர் மாதம் பிற்போடப்பட்ட வருமானமாகும். கணக்குகளில் காண்பிக்கப்படும் பெறுமதி சரியானதாகும்.<br><br>பிராண்டிக்ஸ் இன்டிமேட் அப்பேரல் லிமிடெட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஆரம்பமாகுவது 2006.01.06 இலிருந்தாவதுடன் அதன் பிரகாரம் 2019.12.31 திகதியன்று 13.5 வருட காலப் பகுதிற்கு செலுத்தப்பட்ட ஆரம்ப தொகையை பதிவழிக்க வேண்டிய போதும் கணக்காய்வு ஐயவினாவில் 13 வருட காலத்தை அடிப்படையாக கொண்டு கணக்கிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் அப் பெறுமானத்தால் குறித்த வேறுபாடு ஏற்படடுள்ளதுடன் இதன் பிரகாரம் இந்த கணக்கிடல் சரியானதாகும். | சட்டத்தின் மற்றும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை மாத்திரம் சபையினால் மேறகொள்ள வேண்டும். ஒப்பந்தங்களை இரத்து செய்து இந்த சொத்துக்களை மீள் பெறுவதற்கான இயலுமையை கவனத்திற் கொள்ள வேண்டும். |
| (ஆ) | நாரங்கல்ல பண்ணையின் பண்டக கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியன்று பசுமாடுகளின் எண்ணிக்கை 134 ஆன போதும் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் பசுமாடுகளின் எண்ணிக்கை 143 ஆகக் காண்பிக்கப்பட்டதால் 9 கால்நடைகளின் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நாரங்கல்ல பண்ணையின் பண்டக கணிப்பீட்டு அறிக்கையில் பசுமாடுகளின் எண்ணிக்கை 134 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதன் சரியான எண்ணிக்கை 143 ஆக இருக்க வேண்டும். அது பிரதியிடலின் போது ஏற்பட்ட தவறொன்றாவதுடன் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பசுமாடுகள் சரியானவை ஆவதுடன் கணக்குகளில் காண்பிக்கப்படுவது 143 கால்நடைகளின் பெறுமதியாகும். | பண்டக கணிப்பீட்டு அறிக்கை மற்றும் அதன் தொடர்பான அட்டவணை சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | சபையின் மொத்த வருமானம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 100,095,928 இனால் குறைந்துள்ளதுடன் பிரதான கருத்திட்ட வருமானம் ரூபா | 2018 நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 2019 நிதியாண்டில் வருவாய் குறைந்துள்ளது. தேங்காய் மற்றும் கொப்பரை 13 சதவீதத்தாலும் கோழிக் கருத்திட்டம் - புரொய்லர் | பால் உற்பத்தி மற்றும் பிற முக்கிய செயல்பாடுகளின் வருமானத்தை அதிகரித்துக் |

| | | | |
|---|---|---|---|
| | 187,870,292 இனால் குறைந்தமைக்கு முக்கிய தாக்கம் செலுத்தப்பட்டுள்ளது. பால் உற்பத்தி குறைவடைந்தமை பிரதான கருத்திட்ட வருமானம் குறைவதற்கு காரணமாகவுள்ளது. | 21 சதவீதத்தாலும் பசுமாடு மற்றும் எருமை மாட்டுக் கருத்திட்டம் 2 சதவீத்ததாலும் வருமானம் குறைவடைந்துள்ளது. | கொள்ள சபையினால் செயல்பட வேண்டும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,406,766 ஆக இருந்த பட்டய கருத்திட்ட வருமானம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 2,034,785 வரை குறைந்துள்ளது போதும் அந்த கருத்திட்டத்திற்கான விநியோக செலவுகள் ரூபா 2,984,826 இனால் அதாவது 32,268 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. | பால் சார்ந்த உற்பத்திகளின் விற்பனை வீழ்ச்சியடைய 2019 ஆம் ஆண்டின் பட்டய கருத்திட்ட வருமானம் வீழ்ச்சியடைய முக்கிய காரணமாகவுள்ளது. 2018 ஆம் ஆண்டில் பட்டய விற்பனை நிலையங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்துச் செலவுகள், விநியோகச் செலவில் உள்ளடக்கப்படவில்லை. என்னும் 2019 ஆம் ஆண்டில் அதனை சரி செய்து 2019 ஆம் ஆண்டிற்குரிய போக்குவரத்து செலவான ரூபா 2,966,821 ஆன தொகை போக்குவரத்துச் செலவுகளாக சேர்க்கப்பட்டமை இவ் வித்தியாசத்திற்கு காரணமாகவுள்ளது. | செயல்பாட்டுச் செலவுகளைக் குறைத்துக் கொள்ள சபையினால் நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | பொதுவாக 02 நடைமுறை சொத்துக்களுக்கு 01 நடைமுறைப் பொறுப்புகள் இருக்க வேண்டிய போதும் சபையின் நடைமுறை விகிதம் 0.16 ஆக இருந்தது. விரைவு விகிதமும் 1:1 ஆக இருக்க வேண்டிய போதும் அது 0.08 ஆக இருந்தது. கடந்த ஆண்டின் விரைவு விகிதம் 0.097 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அது வீழ்ச்சியடைந்துள்ளது. இந்நிலை 2013 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நிலவுவதன் காரணமாக சபையில் கடுமையான தொழிற்படு மூலதன பிரச்சினைகள் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் வீழச்சியடைய முக்கிய காரணமாக இருப்பது வருடாந்தம் பெறப்பட்ட நட்டமாவதுடன் இந்த நட்டம் தற்போது குறைவடைந்துள்ளது. கடன் கடன் விகிதம் மற்றும் விரைவு விகிதம் வீழ்ச்சியடைய தாக்கம் செலுத்திய முக்கிய காரணமான விலாட் கருத்திட்ட கடன் தவணையை செலுத்த முடியாமல் போனதாவதுடன் அது அரச முதலீடாக மாற்றியதுடன் இந்த நிலை கனிசமான அளவினால் குறைந்துள்ளது. மேலும் 2020 ஆம் ஆண்டளவில் நடைமுறை விகிதம் 0.77 ஆக அதன் பிரகாரம் வளர்ந்துள்ளதுடன் விரைவு விகிதமும் 0.49 ஆக வளர்ச்சியை அடைந்துள்ளது. | தொழிற்படு மூலதன பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மொத்த இலாப விகிதம் மீளாய்வாண்டில் 17.91 ஆனதுடன் 2018 ஆண்டில் 19.08 ஆக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது குறைந்துள்ளதால் சபையின் | மொத்த இலாப விகிதம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக குறைவடைய முக்கிய காரணமாக அமைந்தது 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டு விவசாய மற்றும் கால்நடை உற்பத்திகளின் சந்தை | இலாப தன்மையை அதிகரிப்பது தொடர்பான பணிகளை சபை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலாபத் தன்மை திருப்திகரமாக இல்லை என அவதானிக்கப்பட்டது. | விலைகள் குறைவடைந்ததுடன் இதனை சபையினால் கட்டுப்படுத்த முடியாததுடன் விவசாய உற்பத்திகளின் வருடாந்தம் இடம்பெறும் விலை ஏற்ற இறக்கங்கள் இலாப தன்மையின் மீது நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. | |
| (எ) | மீளாய்வாண்டில் தேறிய நட்ட நிலைமையொன்றை காட்டுவதுடன் அது 2017 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்தது நிலவுவதாக அவதானிக்கப்பட்டதுடன் ஒதுக்கம் மறை பெறுமானத்தை எடுக்க அது காரணமாக இருந்தது. அது சபையின் தொடர்ந்தியங்கும் நிலைக்கு கடுமையாகப் பாதிப்பை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்பட்டது. | சபையின் 2017 ஆம் ஆண்டு முதல் தேறிய நட்ட நிலையைக் காட்டுவதனை ஏற்றுக் கொள்வதுடன் அது 2022 ஆம் ஆண்டில் தேறிய இலாப நிலையாக மாறியுள்ளது. | இலாப நிலையை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | மொத்த சொத்து புரள்வு விகிதம் மற்றும் நிலையான சொத்து புரள்வு விகிதம் முறையே 0.44 மற்றும் 0.97 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டில் இது 0.44 மற்றும் 0.94 ஆகும் வகையில் காணப்பட்டதுடன் அதனூடாக வருமானம் ஈட்டுவதற்காக சபைக்கு சொந்தமான சொத்துக்களை திறமையான முறையில் பயன்படுத்தாக சிக்கல்கள் அவதானிக்கப்பட்டன. | விவசாய முதன்மை உற்பத்திகளின் சந்தை விலை ஆகக் குறைந்த மட்டத்தில் நிலவுவது மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களின் உள்ளீடுகளின் விலையின் விரைவான அதிகரிப்பு ஆகியவை இந்த நிலைமைக்கு முக்கியமாக பாதித்துள்ளதுடன் இந்த நிலையைக் கட்டுப்படுத்த பெறுமதி சேர்க்கப்பட் உற்பத்தியை அதிகரிக்க எதிர்காலத்தில் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இந்த நிலை தவிர்க்கப்படும். | வருமானத்தை ஈட்டக் கொள்ள சொத்துக்கள் திறமையாக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.3 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் தென்னை, தேக்கு, மஹோகனி மற்றும் இறப்பர் மரங்கள் ரூபா 41,920,346 யிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கான பெறுகை நடவடிக்கைகளை பின்பற்றி இருக்கவில்லை. | வர்த்தகப் பயிர்களாக பேணிச் செல்லப்படும் தென்னை மரங்களுக்கு கிரயம் நீக்கம் செய்யப்படுவதுடன் அங்கு ஒவ்வொரு பண்ணைகளுக்கு தென்னம் பயிர்களின் கிரயத்தை இனங்காணும் முறைமையொன்ற இல்லாததால் அவ்வாறு செய்யும் இயலுமையொன்று இல்லை. தேக்க மரங்கள், மஹோகனி மரங்கள் | மரங்களை விற்பனை செய்யும் போது பெறுகைகள் நடைமுறையை பின்பற்ற வேண்டும். இங்கு சபைக்கு பாதகமொன்று இடம்பெற்றுள்ளனவா என்பது குறித்து |

| | | | |
|---|---|---|---|
| | . | மற்றும் இறப்பர் மரங்களை வர்த்தகப் பயிர்களா இனங்கண்டுள்ள கருத்திட்டங்களில் மரங்களை விற்பனை செய்யும் வருமானம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அதன் கிரயம் இனங்காணல் மேற்கொள்ளப்படும். எனினும் அவ்வாறு வர்த்தகப் பயிர்களா பயிரிடப்படவில்லை. மரங்களை விற்பனை செய்து கிடைக்கும் வருமானத்திற்கு எதிராக கிரயம் பதிவழித்தல் கணக்குகளில் இல்லாததால் அந்த மரங்களின் கிரயம் அகற்றப்படுவதில்லை. | விசாரணையொன்றை நடாத்த வேண்டும |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஹாரகம, பெலிகம, நாரங்கல்ல, மரந்தவில மற்றும் பொலந்தலாவ பண்ணைகளில் மரங்கள் விற்பனை மூலம் 3,585,422 ரூபாய் வருமானம் பெறப்பட்டதுடன், அதற்காக பெறுகைகள் நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | 2019 நிதியாண்டில் பெலிகம பண்ணையில் மிதல்ல மர விற்பனையின் மூலம் ரூபா 157,200 உம் நாரங்கல்ல பண்ணையின் பலா மற்றும் தேக்கு விற்பனை மூலம் 375,500 ரூபா உம் மரதவில பண்ணையின் தேக்கு மரங்கள் விற்பனை மூலம் 1,751,500 ரூபா உம் பொலந்தலாவ பண்ணையின் டர்பெண்டைன் மரங்கள் விற்பனை மூலம் 312,322 ரூபா உம் ஆன வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.<br><br>ஹாரகமவில் மின்கம்பிகள் இடப்பட்டதன் காரணமாக மரங்களிற்கு ஏற்படும் சேதத்திற்காக பெறப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூபா 1,008,900 ஆகும். | மரங்களை விற்பனை செய்யும் போது பெறுகைகள் நடைமுறையை பின்பற்ற வேண்டும். இங்கு சபைக்கு பாதகமொன்று இடம்பெற்றுள்ளனவா என்பது குறித்து விசாரணையொன்றை நடாத்த வேண்டும |